**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 293/2019 |
| Name | : | Karikalan |
| P.W. | : | 21 |
| Father Name | : | Natraj |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கொமரலிங்கத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக உள்ளேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு காலை நேரம் 09.00 மணியளவில் 407 வண்டியை ஸ்டாண்டில் நிறுத்தியிருந்த போது ஒரு டிராக்டர் ருத்திரபாளையத்து வழியில் கொமரலிங்கம் நால் ரோடு அருகே ஒரு டிராக்டர் வந்தது. டம் என்று சத்தம் கேட்டது. எல்லாரும் ஓடிப் போய் பார்த்த போது கீழே ஒரு மூட்டை மாதிரி இருந்தது. அதுவும் வண்டி ஏறிய பிறகு தான் நாங்கள் பார்த்தோம். மண் தெறித்து

வாகனத்தின் சென்டர் மிரர் கண்ணாடி உடைந்துவிட்டது, பேனட்,ரேடியேட்டர் அனைத்தும் உடைந்துவிட்டது. அன்றைய தினம் மாலை போலீசார் சம்பவ இடத்தை பார்த்து வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் நான், தங்கவேலும் ,இருந்த போது எங்கள் முன்னிலையில் மாலை 06.00 மணிக்கு ஆய்வாளர் விபத்து ஏற்பட்ட இடத்தில் சிதறிக்கிடந்த பொருட்களை ரசாயன ஆய்வுக்கு கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் வந்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவ இடத்தில் வெடி பொருள் வெடித்த சத்தம் கேட்டு தான் போனேன் அது யாரால், எங்கு வைக்கப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் போலீசார் படித்து காண்பித்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தவிட்டு போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.10.10 08:46:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்